# தோல் பூஞ்சணம் (Pityriasis versicolor)

தோல் பூஞ்சணம் என்பது பூஞ்சை தொற்று காரணமாக ஏற்படும் பொதுவான தோல் தொற்று நோயாகும். இது *Malassezia furfur* என்ற பூஞ்சையால் ஏற்படுகிறது.

## 1) நோய் எவ்வாறு ஏற்படுகிறது?

பொதுவாக மனித தோலில் பாதிப்பை ஏற்படுத்தாத பூஞ்சை மற்றும் பக்றீரியாக்கள் காணப்படுகின்றன. *Malassezia furfur* கூட இந்த வகையைச் சேர்ந்தது. ஆனால் சில நிபந்தனைகளின் கீழ் (உ.தா – அதிக வெப்பம், ஈரலிப்பு, நோயெதிர்ப்பு குறைபாடு) இந்த பூஞ்சை தோலில் அதிகமாக வளரும்போது நோயை ஏற்படுத்துகிறது. இது ஒரு மரபணு நோயோ அல்லது தொற்று நோயோ அல்ல.

## 2) அறிகுறிகள் என்ன?

- தோலின் மேற்பரப்பில் வெண்மை அல்லது கரும்பழுப்பு நிறமான ஒன்று அல்லது பல புள்ளிகள் காணப்படும்.
- இதனை சுரண்டும் போது அல்லது கீறும் போது சிறிய தோல் துகழ்களை காணலாம்.
- நோயாளிக்கு பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறியளவான அரிப்பு காணப்படலாம்.
- இது உடலின் எந்தப் பகுதியிலும் காணப்படலாம் ஆனால் குறிப்பாக கழுத்து, மார்பு அல்லது முதுகில் அதிகளவில் காணப்படும்.
- வயது வித்தியாசம் இன்றி இது யாரையும் பாதிக்கலாம் என்றாலும், இளைஞர் யுவதிகளிடையே அதிகம் காணப்படுகிறது.

## 3) இதனை எவ்வாறு அடையாளம் காண்பது?

ஒரு தோல் மருத்துவரால் புள்ளிகளைப் பரிசோதிப்பதன் மூலம் நோயைக் கண்டறிய முடியும். மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் இது சிறப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படலாம்.

## 4) சிகிச்சைகள் என்ன?

பெரும்பாலானவர்களுக்கு பூசும் மருந்து மாத்திரம் போதுமானது. எடுத்துக்காட்டாக, பூஞ்சைக்கு எதிரான பூசும்மருந்துகள், சம்பூக்கள் (உ.தா: Ketoconazole cream/ Shampoo) போதுமானது இருப்பினும் மருத்துவர் தேவையேற்படின் சிலருக்கு மாத்திரைகளை பரிந்துரைப்பார்.

## 5) இதனை குணப்படுத்தமுடியுமா?

முறையான சிகிச்சை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நோயை முழுமையாக குணப்படுத்த முடியும்.

## 6) சிகிச்சைக்குப் பிறகு நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

- சரியான சிகிச்சை எடுத்தாலும், சருமத்தின் வெளிர் நிறம் மாற பல மாதங்கள் எடுக்கும்.
- பூரண குணமடைந்த பிறகும் மீண்டும் இந்த நோய் தொற்று ஏற்படலாம்.

தயாரிப்பு - இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கம்
Sri Lanka College of Dermatologists (SLCD) – www.slcd.lk